

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (05.09.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தி இந்து குழுமம் இணைந்து தயாரித்துள்ள 'திருவண்ணாமலை காட்சிக் கையேட்டினை வெளியிட்டார். உடன் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் .பி.என்.ஸ்ரீதர். கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார். திருமதி சி.ஹரிப்ரியா. இந்து குழும பதிப்பக பிரிவின் துணை பொது மேலாளர்கள் எம்.தியாகராஜன், பி.சுப்பிரமணியன், இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய திமுக சார்பில் மரக்காணத்தில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து மரக்காணம் மேற்கு ஒன்றியம் ஓமந்தூரில் நடைபெற்ற செயல் வீரர்கள் கூட்டத்தில் கழகத்தில் மகளிரை அதிக அளவில் சேர்ப்பதற்கான விண்ணப்ப படிவத்தினை நிர்வாகிகளிடம் அவர் வழங்கினார்.உடன் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம்,மாவட்ட பொருளாளர் ரமணன்,மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணைச் சேர்மன் பழனி, மத்திய ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

### கழகத் தீர்மானக் குழுச் செயலாளர்

# அக்ரி கணேசன், பா. பொன்னையன் ஐ.ஏ.எஸ். இல்ல திருமண விழா!

### அமைச்சர் பெருமக்கள் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – அரசு அதிகாரிகள் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

மதுரை, செப் 6-

கழகத் தீர்மான குழு செயலாளரும் முன்னாள் மாநில வேளாண்மை விற்பனைக் குழு தலைவருமான அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை இயக்குனருமான பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., மகள் திருமணம் வரும் 8ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் உள்ள மணமகன் இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது, அதன் விபரம்

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முன்னாள் ஒன்றிய கழக செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினருமான மறைந்த பால்சாமி அவர்கள் பேத்தியும், கழக மாநில தீர்மானக்குழு செயலாளர், அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும்,

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை இயக்குனர் பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., இ.சிநேகலதா தம்பதியினரின் மகள் பா.சௌதாமினி எம்.பி.பி.எஸ்., புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா முத்துப்பட்டினம் எஸ். ராமச்சந்திரன், கீதா தம்பதியரின் மகன் பொறியாளர் ரா.பாலசண்முகம் ஆகியோரின் திருமணம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டினத்தில் அமைந்துள்ள மணமகன் இல்லத்தில் காலை 8.45 மணிக்கு மேல் 9.55 மணிக்குள் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து 10.09.2024 ஆம் தேதி மாலை 06.30 மணிக்கு சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள ஐடிசி கிராண்ட் சோலா ஹோட்டல் ராஜேந்திரன் அரங்கத்தில் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அதேபோல் மதுரையில் வரும் 13.09.2024ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மேல் 3மணிக்குள் பா. சௌதாமினி, ரா.பாலசண்முகம் தம்பதியரின் வரவேற்பு நிகழ்ச்சிகள் மதுரை தூத்துக்குடி சாலையில் உள்ள வேலம்மாள் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஜடா ஸ்கட்டர் அரங்கம் 1ல் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சிகளில் அமைச்சர் பெருமக்கள், அதிகாரி பெருமக்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொழிலதிபர்கள், கழகத்தினர், உறவினர்கள், பொது மக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள்.

# மரக்காணம் கிழக்கு ,மேற்கு, மத்திய ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர் செஞ்சிமஸ்தான் சிறப்புரை!

திண்டிவனம் செப் 7-

மரக்காணம் கிழக்கு ,மேற்கு, மத்திய ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டத்தில் எதிர்வரும் 2026ல்நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில்234 தொகுதிகளில் திமுக அமோக வெற்றி பெற்று மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள் பதவியேற்க திமுக நிர்வாகிகள் அயராது பாடுபட வேண்டுமென அமைச்சர் செஞ்சிமஸ்தான் கேட்டுக்கொண்டார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டம் மரக்காணத்திலும் ,மேற்கு ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டம் ஓமந்தூரிலும்,மத்திய ஒன்றிய கூட்டம் சிறுவாடியிலும் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர்கள்மரக்காணம் கிழக்கு தியாக ராஜன், மேற்கு குமார், மதியம் எஸ். ரவிச்சந்திரன் ஆகியோர் தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் மரக்காணம் கிழக்கு சிவராமன், டி.தயாளன், தேவிராஜதுரை, சந்திரசேகர், தனசேகரன், குப்புராஜ், மரக்காணம் மேற்கு சரவணன், ரவிக்குமார், மீனா குமாரி, முருகன், ஆதிகேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ், மரக்காணம் மத்தியம் செல்வம், சுரேஷ்குமார், சுமதி பார்த்தசாரதி, ரவிசங்கர், வடிவேல், ஆதி கேசவன், பாபு, சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மரக்காணம் கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஒன்றிய துணை சேர்மன் பழனி, மரக்காணம் மத்திய ஒன்றிய செயலாளர் வி.ரவிச்சந்திரன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் டாக்டர் சேகர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மரக்காணம் கிழக்கு ஒன்றியம் செய்யாங்குப்பம் ஊராட்சியைசேர்ந்த பிஜேபி நிர்வாகி முருகையன் அனுமந்தை ஊராட்சியைச் சேர்ந்த மாற்று கட்சியினர் அக் கட்சியில் இருந்து விலகி அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். திமுகவில் இணைந்த அனைவருக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான்சால்வை அணிவித்துவரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா மற்றும் கழக பவள விழா முன்னிட்டு திமுக நிர்வாகிகளுக்கு உறுப்பினர் உரிமை சீட்டுகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

செயல்வீரர்கள் கூட்டத்தில் செப்டம்பர் 17ஆம் தேதிசென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் மரக்காணம் கிழக்கு,மேற்கு, மத்திய ஒன்றிய திமுகசார்பில் திரளான திமுகவினர் பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கூட்டத்தில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்டத் துணைச் செயலாளர் மரக்காணம் ரவிக்குமார்,திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்செயற்குழு உறுப்பினர் சீனராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், பாலகிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர்வேதநாயகி ஆளவந்தார், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவள்ளி குப்புராஜ், திமுக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் – ஆர் இந்திரா ஆகியோரது மகள் மருத்துவர் ஆர்.தீபதி, திருச்செங்கோடு ஆர்.பழனிச்சாமி – பி.கமலம் ஆகியோரின் மகனுமான மருத்துவர் பி.ரேவந்த் ஆகியோரது திருமணம் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே பொன்னுசாமி ஆகியோர் முன்னிலையிலும் நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், அமைச்சர்கள், எம்.பிக்கள், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, நாமக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



திமுக முப்பெரும் விழாவை ஒட்டி ஆண்டு தோறும் பெரியார், அண்ணா, கலைஞர், பாவேந்தர், பேராசிரியர் பெயரில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வரும் செப்டம்பர் 17ஆம் தேதி திமுக பவள விழா ஆண்டை முன்னிட்டு கழக முப்பெரும் விழா நடைபெற உள்ளது. பெரியார் விருது அறிவிக்கப்பட்டுள்ள பாப்பம்மாள் பாட்டியை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக வின் துணை பொது செயலாளருமான ஆ.ராசா நேரில் சென்று வாழ்ந்து தெரிவித்தார். தேக்கம்பட்டி கிராமத்தில் உள்ள பாப்பம்மாள் பாட்டியின் இல்லத்திற்குச் சென்ற ஆ.ராசா எம்.பி அவருக்கு சால்வை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். உடன் கூடலூர் நகர மன்ற தலைவர் அறிவரசு,முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பா.அருண்குமார்,மேடூர் கணேஷன்,உட்பட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை,செப்.7

சிவகங்கை மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 10 ம் தேதி சுற்றுப் பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளார். அவரது சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

10ம் தேதிசெவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி. சிவகங்கை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முதல்வரின் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை துவக்கி வைத்தல் .



காலை.10.30 மணி. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக அரங்கில் மாவட்ட அளவில் நடைபெற்று வரும் அரசு திட்டப்பணிகள் குறித்து ஆய்வு .பகல்.1.00 மணி காளையார் கோவில்தாலுகா நகரம்பட்டியில் நடைபெற்று வரும் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் நினைவு மண்டபம் கட்டிடப் பணிகள் குறித்து ஆய்வு. அதனைத் தொடர்ந்து சிராவயலில் நடைபெற்று வரும் அண்ணல் காந்தி ஜீவா நினைவு மண்டபம் கட்டிடப் பணிகள் ஆய்வு. மாலை 4:30 மணி.காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாக அரங்கில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். மாலை 6.00 மணி. கீழடி அருங்காட்சியகம் பார்வையிடுதல். இரவு மதுரை தங்குதல் . முன்னதாக காலை 9.00மணி. அளவில் மதுரையி. லிருந்து கார் மூலம் வருகைதரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு. மாவட்ட எல்கையான பூவந்தியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இத்தகவலை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தெரிவித்துள்ளார்.

### திருமுருகன்பூண்டி - அவிநாசி ஒன்றிய, பேரூராட்சிப் பகுதிகளில்

# ரூ.5.44 கோடி மதிப்பிலான வளர்ச்சிப்பணிகள்!

### க.செல்வராஜ் எம்.எல்.ஏ. முன்னிலையில் – ஆ.இராசா எம்.பி. துவக்கி வைத்தார்!

திருப்பூர், செப். 7-

அவிநாசி சட்டமன்ற தொகுதி, திருமுருகன் பூண்டி, அவிநாசி ஒன்றிய, பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.5.44 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டப் பணிகளை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செய லாளர், நீலகிரி நாடாளு மன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ. இராசா துவக்கி வைத்தார்!

நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ்,ரூ.11,63,000 இலட்சம் மதிப்பீட்டில், இராமநாதபுரம் ஊராட்சி பால் உற்பத்தியாளர்கள் சங்கம் புதிய கட்டிடத்தை திறந்து வைத்து, செம்பிய நல்லூர் ஊராட்சி நாதம்பாளையத்தில், ரூ.10 லட்சம் மதிப்பீட்டிலான பொது விநியோக கடையை திறந்து வைத்து, அவிநாசி பேரூராட்சி வாரச்சந்தை பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2024 2025 ன் கீழ், ரூபாய் 4 கோடியே 13 லட்சம் மதிப்பீட்டில், வாரச்சந்தை வளாகத்தில் 144 கடைகளை அமைப்பதற்கான பணியை துவக்கி வைத்து, ரூபாய் 47.72 இலட்சம் மதிப்பீட்டில், புதுப்பாளையம் ஊராட்சி கணியாம் பூண்டி முதல் வேலம் பாளையம் பஞ்சாயத்து எல்லை வரை 1.170 கி.மீ சாலை அமைத்தல் பணி, ரூ.51.90 லட்சம் மதிப்பீட்டில், வலையபாளையம் பிரிவு முதல் பெரியார் காலனி வழியாக புதுப்பாளையம் சாலை வரை 1.500 கி.மீ தூரத்தில் சாலை அமைத்தல் பணி, ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில், புதுப்பாளையம் ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ், பொது விநியோ கடை. என மொத்தம் ரூ.5 கோடியே 44 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ. இராசா துவக்கி வைத்து வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார்.

ஆ.இராசா பேசியதாவது :

திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், இந்தியா கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு இந்த தொகுதியில் மீண்டும் போட்டியிடுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கி வேட்பாளராக அறிவித்து உங்கள் கரங்களிலே என்னை ஒப்படைத்தார்.

அவருடைய வேண்டுகோளை ஏற்று கடந்த ஐந்தாண்டு காலங்களில் நான் செய்த பணிகளையும் ஆய்வு செய்து மீண்டும் நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் உறுப்பினராகும் வாய்ப்பினை எனக்கு வழங்கி, என்னை 2.50 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்து இருக்கிறீர்கள் வாக்களித்த பெருமக்களாகிய உங்கள் அனைவரின் பொற்பாதங்களையும் தொட்டு வணங்கி எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 5 ஆண்டுகளாக நான் பணியாற்றிய பணிகளை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஒவ்வொரு பட்ஜெட்டிலும், நீலகிரி தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை நமது முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார். நீலகிரி, மேட்டுப்பாளையம், தாளவாடி, குன்னூர், ஊட்டி, அவிநாசி, பவானிசாகர் ஆகிய பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தற்போது இந்த அவிநாசி தொகுதியில், 10க்கும் மேற்பட்ட ஊர்களில், ரூ.5 கோடியே 44 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 4 கோடியே 13 லட்சம் மதிப்பீட்டில், வாரச்சந்தை வளாகத்தில் 144 கடைகளை அமைப்பதற்காக, பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் வளர்ச்சிப்பணிகளும், திட்டங்களும் மேலும் கூடுதலாக அவிநாசி தொகுதிக்கு வழங்கப்படும். என்று இந்த நேரத்தில் தெரிவித்து, வாக்களித்த உங்களுக்கு மீண்டும், மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று ஆ.இராசா கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ். ஆர்.பழனிசாமி திருமுருகன்பூண்டி, ஈ.ப. சிவப்பிரகாஷ் அவிநாசி, தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, திருமுருகன்பூண்டி நகர செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, நகர்மன்ற தலைவர் குமார், அவிநாசி பேரூர் கழக செயலாளர் திராவிடன் வ.வசந்தகுமார், பேரூராட்சித் தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி. அவிநாசியப்பன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பெரியார் காலணி எம்.எஸ்.மணி,

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.டி.என்.விவேக், திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வே. ராதாகிருஷ்ணன்,

மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ராயல் குமார், துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட பிரதிநிதிகள் டி.பி.வேலுச்சாமி, மாவட்ட விவசாய அணி முன்னாள் அமைப்பாளர் சு.செல்வரங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி சு. பத்மநாபன், அவிநாசி பேரூர் அவைத்தலைவர் இராயப்பா, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் ரமணி துரைசாமி, கருணாம்பாள், கோபாலகிருஷ்ணன், பார்க்கத்துல்லா, கார்த்திகேயன், திருமுருகநாதன், எஸ்.பி.ஆறுமுகம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் மோ.வண்ணஞ்சூரில் நடைபெற்றது,இக்கூட்டத்தில், வடக்கு மாவட்ட கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் வாணியந்தல் எஸ்.ஆறுமுகம், வழக்கறிஞர் எஸ்.பி.அரவிந்தன் மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்துகொண்டனர்.